
பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

## மின்சாரக் கட்டணம் 11.5 வீதம் உயரும்?



2026 ஆம் ஆண்டுக்கான மின் கட்டண திருத்தம் தொடர்பான யோசனையை இலங்கை மின்சார, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 04

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 18 வெள்ளிக்கிழமை 02.01.2026 | அதிர்வு 156

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



‘பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் ஏற்பாடு’ என்ற பெயரில்

# அடக்குமுறையை சட்டமாக்குகிறது அநுர அரசாங்கம்

## அடாவடியை அம்பலப்படுத்தும் கிறிஸ்தவ சமயத் தலைவர்கள்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தற்போது கருத்துச் சுதந்திரத்தையும் நபர்களின் தனியுரிமையையும் அச்சுறுத்தலுக்குள் தள்ளக்கூடிய “பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்“ எனும் மிக மோசமான சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றது. இதன்மூலம் தற்போதைய அரசுக்கும் நெறியியல் மற்றும் அறநெறிசார் சட்டபூர்வத்தன்மை இல்லை என்பது தெளிவாகியுள்ளதாக கிறிஸ்தவ பாதிரிமார்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் 61 பேர் கூட்டாகக் 04

## மாகாணத் தேர்தல் முறையை ஆராய வருகிறது தெரிவுக் குழு!



மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான தேர்தல் முறை குறித்து முடிவு செய்வதற்கு ஒரு தெரிவுக்குழுவை நியமிக்க நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை முன்மொழியப்படும். இதற்காக நாடாளுமன்ற அலுவல் குழுவின் ஒப்புதலை அரசாங்கம் பெற்றுள்ளது. 04

## அதிக இராணுவத்தினர் படையை விட்டு விலகல்

### விமல் வீரவன்ஸ கவலை



இலங்கை இராணுவத்தை விட்டு விலகிச் செல்லும் சிப்பாய்களின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கவலை தெரிவித்துள்ளார். 04




# நயினாதீவு விகாராதிபதி தையிட்டிக்குச் சென்று காணி ஆக்கிரமிப்புக் குறித்து நேரில் பார்த்தார்

நயினாதீவில் உள்ள நாகதீப ரஜ மகா விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் தலைமையிலான பிக்குகள் இன்றைய தினம் தையிட்டி விகாரை பகுதிக்கு விஜயம் செய்து, அங்கு தையிட்டி விகாரை ஆக்கிரமிப்பினால் தமது காணிகளை இழந்துள்ள நில் உரிமை யாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக தனியார் காணி காணிகளில் அனுமதியின்றி இராணு வத்தினரால் தையிட்டி விகாரை அமைக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் நயினாதீவு விகாரதிபதியை அண்மையில் நேரில் சந்தித்து தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

அந்த விடயத்தின் இன்னொரு கட்ட மாக தையிட்டிக்கு இன்று நேரடி விஜயம் மேற்கொண்ட நயினாதீவு விகாரதிபதி காணி உரிமையாளர்களுடன் கலந்து ரையாடியமையுடன், உண்மையில் திஸ்ஸ விகாரைக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்டு பற்றை வளர்ந்திருந்த காணியையும் பார்வையிட்டுச் சென் றார்.














# மிக அதிக அழுத்ததில் கரியமில வாயு இரட்டைக் கோல் வடிவில் ஒதுங்கியது

## உடுத்துறை வேம்படி கடற்கரைப் பகுதியில்

(மரியசீலன் திலைக்ஸ்)

அதிக அழுத்ததில் காபனீரொக்ஸைட் (கரியமில வாயு) அடைக்கப்பட்டதாகக் கருதப்படும் நீண்ட இரட்டைக் கோல் போன்ற ஒரு மர்மப் பொருள் யாழ் வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி கடற்கரை பகுதியில் இன்று கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்று மற்றும் கொந்தளிப்பால் இந்தப் பொருள் அடித்துவரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மக்கள் யாரும் அருகில் செல்ல வேண்டாம் என்றும், பாதுகாப்பு தரப்பினருக்கு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி



மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதில் ஆங்கிலத்தில் Warning - Contains Co2 gas under high pressure. Do not exposed to temperature about 54c. Do not drop. (எச்சரிக்கை - அதிக அழுத்தத்தில் Co2 வாயு உள்ளது. 54°C வெப்பநிலைக்கு உள்ளாக்க வேண்டாம். விழ விட் வேண்டாம்.) என எச்சரிகை அறிவித்தல் ஒட்டப்பட்டிருக்கின்றது.

# நல்லாட்சிக் கால அரசமைப்பு வரைவு ஒற்றையாட்சிக்கு முழு விரோதமானது

## அதற்கு இடம்ளியோம் என சரத் வீரசேகர சூளுரை

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் தயாரித்த வரைவை அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஏனெனில் அந்த வரைவு ஒற்றையாட்சிக்கு முற்றிலும் விரோதமானது. சமஷ்டியாட்சி முறைமை எக்காலத்திலும் உருவாக்கப்பட இடமளிக்கப்பட முடியாது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் இலங்கைக்கு வருகைத் தந்தால் மாகாண சபைத் தேர்தல் மற்றும் புதிய அரசமைப்புக் குறித்து பேசப்படும். இலங்கையின் உள்ளக விவகாரங்கள் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்



தையில் ஈடுபடுவது அவசியமற்றது.

இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே இலங்கையில் மாகாண சபை முறைமை அமுல்படுத்தப்பட்டது. உண்மையில் இது தேவையில்லாத ஒரு விடயமாகும். இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு அறிமுகப்படுத்திய மாகாணசபை முறைமை நிர்வாக கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியது.

தேர்தல் முறைமை காரணமாக மாகாணசபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இதனால் எவ்வித பாதிப்பும் சமூக கட்டமைப்பில் ஏற்படவில்லை. ஆகவே மாகாண சபைத் தேர்தல் முறைமையை முழுமையாக இரத்துச் செய்வது பொருத்தமானதாக அமையும்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் தயாரித்த வரைவை அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஏனெனில் அந்த வரைவு ஒற்றையாட்சிக்கு முற்றிலும் விரோதமானது. சமஷ்டியாட்சி முறைமைக்கு எக்காலத்திலும் இடமளிக்க முடியாது.

இலங்கையை மதசார்பற்ற நாடாக மாற்றுவதாக தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் குறிப்பிட்டனர். அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாட்டின் தேசியத்துக்கு எதிரானதாகவே காணப்படுகிறது. ஒற்றையாட்சி மற்றும் தேசியத்துக்கு எதிரான வகையில் அரசாங்கம் செயற்பட்டால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும். என்றார்.

## அடக்குமுறையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிசனை வெளியிட்டுள்ளனர்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்" எனும் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதனை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அது பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவித்துள்ளார்.

இந்நிலையில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பில் தமது கரிசனைகளையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தி அருட்தந்தை மா.சத்திவேல், அருட்தந்தை டெரன்ஸ் பர்ணாந்து, அருட்தந்தை எஸ்.விமலசேகரன், அருட்தந்தை மனுவேல் பிள்ளை டேவிட், அருட்சகோதரி தீபா பர்ணாந்து, செனாலி பெரேரா, சேனக்க பெரேரா, ருக்கி பர்ணாந்து ஆகியோர் உள்ளடங்கலாக அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் (கிறிஸ்தவர்கள்) அடங்கிய 61 பேரின் கையெழுத்துடன் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பன வரலாற்று ரீதியாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்காகவோ அல்லது அச்சட்டத்துக்குப் பதிலீடாக முன்னைய அரசாங்கங்களினால் முன்வைக்கப்பட்ட "பயங்கரவாத எதிர்ப்புச்சட்டங்களை" நிராகரிப்பதற்காகவோ மாத்திரம் போராடிய இயக்கங்கள் அல்ல.

மாறாக அவர்களது அரசியல் நிலைப்பாடானது, புதிதாக எந்தவொரு அடக்குமுறை சட்ட வடிவங்களும் கொண்டுவரப்படக்கூடாது என்ற தெளிவான மறுப்பையே அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தது. இந்த நிலைப்பாடு "பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளடங்கலாக அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் இரத்துச்செய்து, மக்களின் சுதந்திரத்தை உறுதிசெய்வோம்" என்றவாறு தேர்தல் வாக்குறுதியாகவும் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு தெளிவாக அறிவிக்கப்பட்ட உறுதிமொழிகளையும், அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிய தமது அரசியல் வரலாற்றையும் முழுமையாகப் புறக்கணித்திருக்கும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மிகக் கொடூரமானதும், அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு வாய்ப்பளிக்கக் கூடியதுமான அம்சங்களை மாற்றமின்றித் தக்கவைத்துக்கொண்டு, மேலும் தெளிவற்றதும் அபாயகரமானதுமான புதிய விதிகளின் மூலம் அரச அதிகாரத்தை விரிவுபடுத்துவதற்கு இடமளிக்கக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இப்போது தயாராகி இருப்பது மிகுந்த கவலையையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருக்கும் இந்த சட்ட வரைவு கருத்துச் சுதந்திரத்தையும், நபர்களின் தனியுரிமையையும் அச்சுறுத்தல் நிலைக்குள் தள்ளியிருக்கின்றது.

இந்தச் சட்டத்துக்கு நாங்கள் நிபந்தனையற்ற எமது முழுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றோம். இது எமது தனிப்பட்ட நிலைப்பாடு மாத்திரமல்ல. மாறாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் அவர்களாகவே நாட்டுமக்களிடம் அறிவித்த அரசியல் நிலைப்பாட்டின் தொடர்ச்சியாகும்.

அரசாங்கம் இந்த சட்ட வரைவு குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கு ஒருமாத கால அவகாசத்தை அறிவித்திருந்தாலும், தேசிய ரீதியில் பல்வேறு அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் நிலவுகின்ற தற்போதைய சூழ்நிலையில், இந்தளவு பரந்துபட்டதும் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதுமான ஒரு சட்டத்தைக் கொண்டுவரும் பணிகளை விரைந்து முன்னெடுப்பது உண்மையான ஜனநாயகப் பங்கேற்பையும், மக்களின் அறிவார்ந்த ஒப்புதலையும் பாதிக்கின்றது. எனவே இது முன்னைய ஆட்சிக்காலங்களில் நடந்ததைப்போல, பொதுக் கலந்தாலோசனையை உள்ளடக்காத ஒரு நடைமுறைச்சடங்காகவே தோன்றுகிறது.

பயங்கரவாதத்தடைச்சட்டமானது சிறுபான்மையினர், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் அநீதிக்கு எதிராகக் குரலெழுப்புவோரை இலக்கு வைத்துப் பிரயோகிக்கப்பட்டதுடன், அது அவர்கள் மீது மட்டுமீறிய தாக்கத்தை ஏற்படுத்தியதாக நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி அந்தச் சட்டத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டோரில் இன்றைய அரசை வழிநடத்தும் அரசியல் இயக்கத்தின் உறுப்பினர்களே முக்கியமானவர்களாக இருந்தனர். இத்தகைய பின்னணியில், அடக்குமுறைச் சட்டத்தின் விளைவுகளையும் பாதிப்புக்களையும் அனுபவித்தவர்களே இந்தச் சட்டத்தின் விளைவுகளை விதி விதியாக விளக்கிக் கூறுவது அவசியமற்றதாகும்.

முன்னர் ஆட்சியில் இருந்த எதிர்க்கட்சிகளுக்கு இந்தச் சட்டத்தை விமர்சிக்கும் அரசியல் உரிமை இருந்தாலும், அவர்களது சொந்த சட்ட வரலாறுகளை நினைத்துப் பார்க்கும்போது, அந்த விமர்சனங்களுக்கு நெறியியல் நம்பகத்தன்மை இல்லை என்பதையும் நாம் தெளிவாகக் கூறுகின்றோம். அதேபோன்று அடக்குமுறை சட்ட வடிவங்களை நீக்குவோம் என வெளிப்படையாக வாக்குறுதி அளித்திருந்த நிலையில், இவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கும் தற்போதைய அரசுக்கும் நெறியியல் மற்றும் அறநெறிசார் சட்டபூர்வத்தன்மை இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

இந்த மகஜரில் கையொப்பமிட்டுள்ள நாமனைவரும் பயங்கரவாதத்தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட நாள் முதல், அதற்கும் அதனை வேறு பெயர்களிலும் வடிவங்களிலும் மீண்டும் உருவாக்கும் சகல முயற்சிகளுக்கும் எதிராகத் திடமான எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்திருக்கின்றோம்.

எமது கிறிஸ்தவ நம்பிக்கையிலும் ஆன்மீகத்திலும் ஆழ்ந்திருக்கும் நாம், அநியாயத்தை சட்டமாக்கி, அரச அதிகாரத்தின் மட்டுமீறிய விரிவாக்கத்தை இயல்பாக்கம் செய்யும் சட்டங்களுக்கு எதிரான ஒரு அறநெறிசார் சாட்சியமாக இந்த மகஜரை முன்வைக்கின்றோம். - என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மின்சாரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடம் சமர்பித்துள்ளது.

அதன்படி, ஆண்டின் முதல் காலாண்டிற்கு (ஜனவரி மாதம் தொடக்கம்) 11.57 சதவீத மின் கட்டண அதிகரிப்புக்கான யோசனையை இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ், வீட்டு மின்சார நுகர்வோர் அனைத்து நுகர்வு தொகுதிகளிலும் யூனிட் கட்டணங்கள் மற்றும் நிலையான மாதாந்திர கட்டணங்கள் இரண்டிலும் அதிகரிப்பை எதிர்கொள்ள நேரிடும்.

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் கூடிய அலுவல் குழு, ஜனவரி 6 ஆம் தேதி தெரிவுக்குழுவை நியமிக்கும் முடிவை அங்கீகரித்தது.

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய தேர்தல் முறையைத் தேர்ந்தெடுப்பது குறித்து தெரிவுக்குழு ஆராய்ந்து நாடாளுமன்றத்திற்கு அறிக்கை அளிக்கும். மேலும் அவ்விடயம் தொடர்பான அதன் முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை தெரிவுக்குழு சமர்ப்பிக்கும். இதற்கு ஒப்புதல் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பான சட்ட நிலைமையை மறுஆய்வு செய்வதற்கும் தேர்தலை விரைவாக நடத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஒரு சிறப்பு தெரிவுக்குழு நியமிக்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடந்த ஆண்டு நவம்பரில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே.

## அதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புது வருடத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இதனை அவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் -

இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் வரப்பிரசாதங்கள் நாளுக்கு நாள் குறைக்கப்படுகின்றன. அத்தோடு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணங்களுக்காக விருப்பு வெறுப்புக்களைக் கருத்தில் கொள்ளாமல் சம்பளம் வெட்டப்படுகிறது.

2030 ஆம் ஆண்டளவில் 60 ஆயிரமாக இராணுவத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். இராணுவ சிப்பாய்கள் வாழ்க்கை நடத்த போதுமான வருமானம் இல்லாமல் விட்டுச் செல்கின்றனர்.

இதில் இராணுவத்தின் உயரதிகாரிகளும் விலகிச் செல்கின்றனர்.

அது மட்டுமல்ல பங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்களை கொண்டு வருகின்றனர். ஆனால் அவ்வாறான சட்டங்களில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதல்ல, ஜனநாயக அரசியலில் ஈடுபடும் கட்சிகள் மற்றும் அரசியல் வாதிகளைக் கட்டுப்பத்துவதையே முன்னெடுத்துச் செல்கின்றனர். - எனக் குறிப்பிட்டுள்ளார்.



# கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயப் பிரதேசத்தில் அகழ்வுப் பணிக்குத் தயாராகும் தொல்லியல் திணைக்களம்!

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயம் இருந்த பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் அகழ்வுப்பணி மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அதற்காக அந்த பகுதியில் கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக அதற்கான முன்னாயத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தப் பகுதியில் அகழ்வுப் பணியை மேற்கொண்டு ஆய்வுகளை செய்வதற்காக தொல்லியல் திணைக்களத்திற்கு தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. அத்துடன் அந்தப் பகுதியில் பாரிய புத்தர் சிலை ஒன்று அவசர அவசரமான திறந்து வைக்கப்பட்டிருந்தமையும் பெரும் விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

தமிழ் மக்களின் பார்வையில் தொல்லியல் திணைக்களம் பௌத்தத்திற்குரிய திணைக்களமாகவே இயங்கி வருவதால் நியாயமான முறையில் ஆய்வு மேற்கொள்ளப்படுமா என்ற சந்தேகம் நிலவுவதாகவும், இதனால் இந்தப் பணியின்போது பார்வையாளர்களாக தமிழ் தரப்பினரையும், அவர்களது அபிப்பிராயங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கன்னியா வெந்நீரூற்றை அண்மித்த பகுதியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டிருந்த மாரியம்மன் அறக்கட்டளைக்குச் சொந்தமான 200 வருடங்கள் பழமையான பிள்ளையார் ஆலயமானது 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனருத்தாரன பணிக்காக உடைக்கப்பட்ட போது தொல்லியல் திணைக்களத்தினால் அப்பகுதி தொல்லியலுக்கு உரியது என அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த பகுதியில் பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக கூறி குறித்த காணியின் உரிமையாளரும், பிள்ளையார் ஆலயத்தின் அறங்காவலருமான கோகிலரமணி என்பவரால் திருகோணமலை மேல் நீதிமன்றில் 29.07.2019 அன்று வழக்கு தொடரப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பௌத்த விகாரை கட்டுவதற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டதுடன் பிள்ளையார் கோவில் கட்டுவதற்காக கன்னியா வெந்நீரூற்றின் நுழைவுப்பகுதியின் இடது பக்க மூலையில் 10 பேர்ச் காணி வழங்கப்பட்டிருந்தது.

1623 - 1638 ஆண்டு வரை பறங்கிய படைத் தளபதியாக இருந்த நபரால் மடத்தடி மாரியம்மன் ஆலயத்திற்கு நன்கொடையாக கொடுக்கப்பட்ட ஒரு பிரதேசமே கன்னியா வெந்நீரூற்றும் பிள்ளையார் ஆலயமும் என்பதும் பல ஆவணங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



# 84 வயதுக் கணவனின் தாக்குதலில் 79 வயதுடைய மனைவி உயிரிழப்பு!

## அகலவத்தை, தெல்பவத்தை பகுதியில் சம்பவம்

நேற்று ஜனவரி முதலாம் திகதி புத்தாண்டுத் தினத்தன்று காலை அகலவத்தை, தெல்பவத்தை பகுதியில் கணவரால் தாக்கப்பட்டதில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மகாகம, தெல்பவத்தை பகுதியைச் சேர்ந்த 79 வயதுடைய வயோதிப மாதுவே உயிரிழந்தார்.

நீண்ட காலமாக ஏற்பட்ட தகராறில், கணவர் அவரை கதவு பூட்டால் தாக்கிய போது இந்த மரணம் நேர்ந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

84 வயதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அகலவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அவசரகால அத்துமீறல்

நாட்டைத் தாக்கிய சூறாவளியை அடுத்து உருவான வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்றவற்றால் நாட்டில் ஏற்பட்ட பேரனர்த்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அது பின்னர் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் அவசரகால நிலையை மேலும் காலநீடிப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்கவின் கையொப்பத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. அது மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா, மீண்டும் ஒரு மாதம் கடந்து அதை நீடிக்க வசதியாக அது இம்முறையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுமா என்பவை இன்னும் தெரியவில்லை.

ஆயினும் இந்த அவசரகாலநிலை அறிவிப்புக் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

"அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு அவசரகால நிலை பிரகடனம் தொடர்வது அவசியம் என நியாயப்படுத்த முடிந்தாலும், அதில் உள்வாங்கப்பட்டுள்ள சில வழிகாட்டல்கள் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகவே உள்ளன. அவை குறித்து நாம் ஜனாதிபதிக்குக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதிலும், காலநீடிப்பு செய்யப்பட்டுள்ள அவசரகாலநிலை பிரகடனத்தில் எமது அவதானிப்புக்கள் உள்வாங்கப்பட்டவையாகத் தெரியவில்லை" - என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டு ஒரு வாரகாலத்தின் பின்னர் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஜனாதிபதியையோ அல்லது அரசாங்கத்தையோ விமர்சிப்போருக்கு எதிராக அந்த அவசரகாலப் பிரகடன வழிகாட்டல்கள் பிரயோகிக்கப்படும் என அரசாங்கத்தின் பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட பொது அறிவிப்புக்கள் குறித்து அதில் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருந்தது. அதுமாத்திரமன்றி அவசரகாலச்சட்ட விதிகளின் முறையான பிரயோகம் குறித்தும் அக்கடிதத்தில் விரிவாக விளக்கமளித்திருந்தது.

அவசரகாலப்பிரகடன வழிகாட்டல்கள் தொடர்பான தமது அவதானிப்புக்களை ஜனாதிபதிக்கு அறியத்தந்திருந்த போதிலும், அதனைக் காலநீடிப்பு செய்து வெளியிட்டிருக்கும் வழிகாட்டல்களில் எவ்வித மாற்றங்களையும் அவதானிக்க முடியவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் நிமல் புஞ்சிஹேவா விசனம் தெரிவித்துள்ளார். அதுமாத்திரமன்றி ஏற்கனவே வெளியிடப்பட்ட அதே வழிகாட்டல்களே தற்போது மீண்டும் அப்படியே காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு அவசரகாலநிலை பிரகடனம் தொடர்வது அவசியம் என நியாயப்படுத்த முடிந்தாலும், அதில் உள்வாங்கப்பட்டுள்ள சில வழிகாட்டல்கள் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகவே உள்ளன. அவை குறித்து நாம் ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதிலும், காலநீடிப்பு செய்யப்பட்டுள்ள அவசரகாலநிலை பிரகடனத்தில் எமது அவதானிப்புக்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை'' என அவர் தெரிவித்திருக்கின்றார்.

அவசர கால நிலைப் பிரகடனம் தொடர்பாக ஆளும்தரப்புத் தலைவர்கள் வெளியிட்ட சண்டப் பிரசண்ட அறிவிப்புகளுக்கு மத்தியில் மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டும் விடயம் கவலைக்குரிய அம்சம் என்பது மறுக்க முடியாதது.

# மார்கழி பௌர்ணமி தினமான நாளை வேலோடுமலையில் 210 சித்தர்கள் வேள்வி


(வி.ரி.சகாதேவராஜா)

மார்கழி பௌர்ணமி தினமாகிய நாளை சனிக்கிழமை " ஈழத்து பழனி" என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலயத்தில் 210 சித்தர்களின் வேள்வி யாகத்துடன் விசேட வழிபாடு நடைபெற விருக்கிறது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் முருக பக்தர் சுப்பிரமணியம் தியாகராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தப் பௌர்ணமி நிகழ்வில், சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையிலான குழுவினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் சித்தர்களே வந்து வேலோடு மலையின் உச்சியில் உள்ள சித்தர்கள் பூஜித்த வேலை பூஜித்துவிட்டு செல்வதாக இன்று வரை சொல்லப்படுகிறது.







அந்த அபூர்வமான நேரத்தில் ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் சர்வ வல்லமை வாய்ந்த இந்த உலகத்தை ஆளும் 210 சித்தர்கள் பூஜை நடைபெறு கிறது.

நீண்ட கால இடைவேளைக்கு பிறகு வேலோடு மலையில் இலங்கையின் எல்லா பாகங்களில் இருந்தும் ஆன் மீகத்தில் உச்சம் பெற்ற பல யோகிகள், குருமார்கள் இந்த மார்கழி மாத பௌர்ணமியன்று அங்கு ஒன்றுகூடி அபூர்வமான காயகல்ப மூலிகைகளால் ஒரு மாபெரும் வேள்வியினை செய்ய வுள்ளனர். வழமைபோல் இந்த முறை யும் மார்கழி மாத பௌர்ணமியன்று மூலி கைக் குளியலுடன் ஆரம்பமாகி, 18 சித்தர்கள் சந்நிதியில் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி, வேல் பூஜை மற்றும் இரவு முழுவதும் "தபஸ்" என்னும் உயர்ந்த ஆழ்நிலை தியானம் இரவு முழுவதும் வழமை போல் நடை பெறும்.



# சாய்ந்தமருதில் உரிமம் இல்லாத இறைச்சி மீட்கப்பட்டு நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதன் தலைமையின் கீழ் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழு சாய்ந்தமருது பிரிவுக்கு உட்பட்ட ஆட்டிறைச்சி கடைகளைப் பரிசோதனை செய்தது.

இந்தப் பரிசோதனையின் மூலம் உரிமம் இல்லாத இறைச்சிகள் மீட்கப்பட்டு அவை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் உணவு தொடர்பான சட்ட நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.









# முத்துப்பந்திய கடற்கரைப் பகுதியில் கடலரிப்பைத் தடுக்கும் வேலைத்திட்டம்

**(உடப்பு நிருபர்)**

ஆராச்சிக்கட்டு பிரதேச சபைக்கு உட்பட்ட ஆனைவிழுந்தான் கிராமம் ஊடாகச் செல்லும் முத்துப்பந்திய கடற்கரைப் பகுதி அண்மையில் ஏற்பட்ட 'டித்வா' வெள்ளம் காரணமாகப் பாரிய சேதத்தை எதிர் நோக்கியது. இதனால் இந்தப் பகுதியில் பல தென்னை மரங்கள் கடலில் இழுத்துச் செல்லப்பட்டன.

அத்துடன் வீடுகள் சில கடலில் மூழ்கடிக்கப்பட்டன. அத்தோடு உயிர்ச் சேதங்களும் இடம்பெற்றன.

இங்கு தற்போது கடலரிப்பு மிகவேகமாக இடம்பெற்று வருகின்றது. இதனை ஓரளவு நிவர்த்தி செய்யும் நோக்குடன் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்கிஹான் முன்னெடுப்பில் கடலரிப்பைத் தடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்றன. இதில் மக்களும் கலந்துகொண்டனர்.






# தன்னார்வ ஆலோசனைக் குழு உறுப்பினராக பேராசிரியர் பாஸில்!

## உள்ளூராட்சி அமைச்சில் நியமனம்

**(அஸ்லம்)**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதியான பேராசிரியர் கலாநிதி எம். எம். பாஸில், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தன்னார்வ ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபயரத்னவால் இவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கான அரச சேவைகளின் திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் சரியான நேரத்தில் சேவைகளை வழங்கும் நடைமுறைகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், நிபுணர்களின் அறிவு மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்த அரசு மேற்கொண்டு வரும் மூலோபாயக் கொள்கை முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

கல்வி, கலாசாரம், சமூக அபிவிருத்தி மற்றும் நிர்வாகத் துறைகளில் பேராசிரியர் எம்.எம். பாஸில் பெற்றுள்ள நீண்டகால அனுபவமும், கல்விசார் பங்களிப்புகளும், பொதுச் சேவைத் துறையை மேலும் வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை பரீட்சை திணைக்களத்துக்கு புதிய பிரதிப் பரீட்சை ஆணையாளர்!

**(நடராஜா மலர்வேந்தன், பசறை நிருபர் )**

மலையக சமூகத்தின் கல்வி முன்னேற்றத்தில் பங்காற்றிவரும் இராஜ் கோமகன், நேற்று முதல் பிரதி பரீட்சை ஆணையாளராக தனது கட மைகளை பொறுப்பேற்றுள்ளார்.

ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியும் பசறை தமிழ் தேசிய பாடசாலையில் உயர் கல்வியும் தொடர்ந்தார்.

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் 2003 - 2005 காலப் பகுதியில் உடற்கல்வி ஆசிரியராகப் பயிற்சி பெற்றார்.

முதலில் லுணுகலை ஸ்ரீ இராம கிருஷ்ணா கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றியதுடன், பின்னர் மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்திலும் கல்விச் சேவை ஆற்றினார்.



இவர் பாடசாலை மாணவர் பருவத்திலேயே விளையாட்டுத்துறையில் அதீத ஆர்வம் கொண்டிருந்ததோடு விளையாட்டு நிகழ்ச்சிகளில் பல்வேறு வெற்றிகளைப் பெற்று தேசிய ரீதியில் பாடசாலைக்கு பெருமை சேர்த்த சாதனை மாணவராக விளங்கினார். ஆசிரியராக சேவையாற்றிய போது மாணவர்களின் உடல் ஆரோக்கியத்துக்கும்விளையாட்டுதிறன்களுக்குமான பயிற்சியை நேர்த்தியாக வழங்கி பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதான துறைகளில் சாதனை படைக்க சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்துள்ளார்.

பட்டதாரியான இவர், ஆள்பதிவுத் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றிய அனுபவமும் பெற்றுள்ளார்.

2018 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் வெற்றி பெற்று, தெஹியோவிட்ட வலயத்தில் உதவி கல்விப் பணிப்பாளராக ஆறு வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

2023/2024 ஆண்டுகளில் சப்ரகமுவ மாகாணத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

இவர் தற்போது பிரதி பரீட்சை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



# வருடாந்த திருவாசக பெருவிழா இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் ஆச்சிரம முதல்வர் சாதனைத்தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை காலத்தில் நடைபெறும் திருவாசக விழாவானது இன்று இடம் பெற்றது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நடராஜர் மற்றும் நாயன்மார்களின் திருவுருவங்களுடன் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக சந்நிதி ஆலயத்திலிருந்து மங்கள இசையுடன் கூடிய அடியார்களின் சிவபுராண ஒதுதலுடன் ஆச்சிரமத்துக்கு எடுத்துவரப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து, யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்ததுறை பேராசிரியர் தி.செல்வமனோகரனின் “ஆரோடு நோகேன்” என்னும் திருவாசக அருளுரை இடம்பெற்றது. உதவித் திட்டங்களாக, 97,700 ரூபா பெறுமதியான 2 சைக்கிள்கள் வழங் கப்பட்டன.

வவுனியா – பரசங்குளத்தை சேர்ந்த தரம் – 10 இல் கல்வி கற்கும் மாணவிக்கும், அல்வாய் பகுதியை சேர்ந்த தரம்– 7 இல் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை இடம்பெற்றன.

















# வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம்!

(பூ.லின்ரன்)

யாழ். வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழு கூட்டம் இன்று காலை நாடாளு மன்ற உறுப்பினரும் வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழு தலைவருமான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தலைமையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மற்றும் வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கொண்டனர்.








# புத்தளத்தில் புத்தாண்டில் புதிய பஸ் சேவை ஆரம்பம்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

புத்தளம் வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மயிலங்குளம் நகரத்துக்கான புதிய பயணிகள் பஸ் சேவையை புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஜே. எம். பைசல் புத்தாண்டு தினமான நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

மயிலங்குளத்தில் இருந்து புத்தளம் நகர் வரையான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் ஊடாக இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்து வந்த இந்த பயணிகள் போக்குவரத்து பஸ் சேவையின் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் இதற்காக புத்தளம் எம்.ஜே.எம். பைசல எம்.பிக்கு பொதுமக்கள் தமது நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம்.பைசல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இந்த பஸ் சேவையை ஆரம்பித்து வைத்ததோடு, இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூர் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆன்மிகமும் பண்பாடும் இணைந்த திருவாதிரை!

## (நாளை திருவாதிரை. அதனையொட்டிய கட்டுரை இது)

திருவாதிரை என்பது ஆன்மிகமும் பண்பாடும் இணையும் திருநாள். தமிழ் மக்களின் ஆன்மிக வாழ்க்கையிலும் பண்பாட்டு மரபிலும் முக்கிய இடம் பெற்ற திருநாள்களில் திருவாதிரையும் ஒன்றாகும்.

திருவாதிரை என்பது மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திர நாளில் கொண்டாடப்படும் சிறப்பு நிகழ்வு.

சிவபெருமானை மையமாகக் கொண்டு கொண்டாடப்படும் இந்த விழா, சைவ சமயத்தின் உயர்ந்த தத்துவங்களை வெளிப்படுத்துகிறது.

திருவாதிரை நாளில் சிவபெருமான் ஆனந்த தாண்டவம் ஆடியதாக நம்பப்படுகிறது. இந்த நடனம் உலகின் படைப்பு, நிலை, அழிவு, மறைவு, அருள் ஆகிய ஐந்து செயல்களை (பஞ்சகிருத்தியங்கள்) குறிக்கிறது. சிதம்பர நடராஜர் ஆலயத்தில் நடைபெறும் திருவாதிரை உற்சவம் உலகப் புகழ் பெற்றதாகும். அன்றைய தினம் அபிஷேகம், சிறப்பு பூஜைகள், நடன ஆராதனைகள் ஆகியவை விமரிசையாக நடைபெறுவது வழமை.

திருவாதிரை அல்லது ஆருத்ரா தரிசனம் என்பது தமிழர் வாழ்வில் மிக முக்கியமான திருவிழாக்களில் ஒன்றாகும்.

இந்த நாளை தமிழர்கள் பக்தி பரவசத்தில் கொண்டாடி, பச்சிலை, மாவிலாக்கொடி, மஞ்சள் போன்றவற்றால் வீடுகளை அலங்கரித்து கொண்டாடுவர்.

திருவாதிரை நட்சத்திரமானது இன்று வெள்ளிக்கிழமை இரவு 08:04 மணிக்குத் தொடங்கி, நாளை மாலை 05:27 மணி வரை நீடிக்கும்.

இந்த நேரத்தில் ஆருத்ரா தரிசனம் செய்வதன் மூலம், சிவபெருமானின் அருளைப் பெறலாம் என்பது நம்பிக்கை.

திருவாதிரை என்பது வெறும் ஒரு நாள் கொண்டாட்டம் மட்டுமல்ல. இது நம் முன்னோர்களின் நம்பிக்கைகள், கலாச்சாரம் மற்றும் ஆன்மிக வாழ்வு ஆகியவற்றை இணைக்கும் ஒரு பாலமாகும். இந்த விழா நம்மை ஒற்றுமையாக இணைத்து, நமது பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல உதவுகிறது. திருவாதிரை கொண்டாட்டம், அன்பு, பக்தி, ஒற்றுமை மற்றும் புதிய தொடக்கங்களைக் குறிக்கும் ஒரு சிறப்பு நிகழ்வாகும்.



மார்கழி மாதத்தில் வரும் இந்தத் திருநாள், நட்சத்திரங்களில் ஆறுதிரை (ஆருத்ரா) நட்சத்திரத்துடன் தொடர்புடையதாகும்.

திருவாதிரை என்பது ஆன்மிக விழாவாக மட்டுமல்ல, குடும்பம் மற்றும் சமூக உறவுகளை வலுப்படுத்தும் நாளாகவும் விளங்குகிறது. குறிப்பாக பெண்கள் இந்த நாளில் விரதம் இருந்து, சிவபெருமானை வழிபட்டு, குடும்ப நலனுக்காக பிரார்த்தனை செய்கிறார்கள். இல்லங்களில் "களி" மற்றும் "ஏழு கறி, கூட்டு" போன்ற பாரம்பரிய உணவுகள் தயாரிக்கப்படுவது திருவாதிரையின் தனிச்சிறப்பாகும். இவை இயற்கையுடனான ஒற்றுமையையும், சமநிலையான உணவு முறையையும் எடுத்துக்காட்டுகின்றன.

இந்தத் திருநாள் தமிழர் பண்பாட்டின் ஆழத்தையும், ஆன்மிக சிந்தனையின் உயரத்தையும் வெளிப்படுத்துகிறது. திருவாதிரை வழிபாடு மனிதனுக்குள் உள்ள அகந்தையை நீக்கி, சுயஞானத்தை வளர்க்கும் என சைவ சித்தாந்தம் கூறுகிறது. சிவபெருமானின் தாண்டவம், மனித வாழ்க்கையில் மாற்றம் தவிர்க்க முடியாதது என்பதையும், அந்த மாற்றங்களை அருளோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

இன்றைய வேகமான வாழ்க்கைச் சூழலில், திருவாதிரை போன்ற விழாக்கள் நம்மை நமது பண்பாட்டு வேர்களுடன் இணைக்கின்றன. ஆன்மிக அமைதி, குடும்ப ஒற்றுமை, சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்க்கும் இந்தத் திருநாள், தலைமுறைகள் கடந்தும் தமிழர் வாழ்வில் ஒளி வீசும் விழாவாகத் திகழ்கிறது.

**வித்தகர் விபுலமாமணி**
வி.ரி.சகாதேவராஜா,
காரைதீவு நிருபர்.





# கடற்படையினர் சத்தியப்பிரமாணத்தோடு புத்தாண்டின் கடமைகளை ஆரம்பித்தனர்

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இலங்கை கடற்படை, அரச சேவைக்கான சத்தியப்பிரமாணத்தை செய்த பின்னர் நேற்று புத்தாண்டில் தனது கடமைகளைத் தொடங்கியது. அதே வேளையில், கடற்படையின் அனைத்து கடற்படை கட்டளைகளுக்கும் சொந்தமான அனைத்து கப்பல்கள் மற்றும் நிறுவனங்களிலும் அரச சத்தியப்பிரமாணம் எடுக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்புக்கான இலங்கை கடற்படையின் தனித்துவமான பொறுப்பை நிறைவேற்றுவதுடன், சமூக சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை முயற்சிகளை உள்ளடக்கிய தேசிய மேம்பாட்டு செயல்முறைக்கு, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை, வழிகாட்டுதலின் கீழ், கடற்படையின் வளங்கள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குதல் போன்ற பரந்த அளவிலான கடமைகள், அரச கொள்கைகள் மற்றும் நோக்கங்களை 2026 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதில் கடற்படைக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை திறம்பட, உறுதியுடன், மிகுந்த அர்ப்பணிப்புடன், நேர்மையாகவும், பொது மக்களுக்கு விசுவாசமாகவும் நிறைவேற்றுவதற்கு அனைத்து கடற்படையினரும் அரசு ஊழியர்களும் சத்தியப்பிரமாணத்தை எடுத்துக் கொண்டனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கான்சன பானகொடவின் தலைமையில் அக்குரேகொட பாதுகாப்பு தலைமையக வளாகத்தின், கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற அரச சேவைக்கான சத்தியப்பிரமாணம் எடுக்கும் சந்தர்ப்பத்தில் கடற்படைத் தலைமை அதிகாரி உட்பட கடற்படை மேலாண்மை வாரியம், கொடி அதிகாரிகள், சிரேஷ்ட , கனிஷ்ட அதிகாரிகள், சிரேஷ்ட, கனிஷ்ட மாலுமிகள் மற்றும் சிவில் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.





# ஒழுங்குப் பிரச்சினைகள் நிறைந்த தி.மு.க. அரசுக்கு முடிவு கட்டுவோம்

## புத்தாண்டில் சசிகலா சபதம்



போராட்டங்கள், சட்டம் – ஒழுங்கு பிரச்சினைகள் நிறைந்த தி.மு.க. அரசை முடிவுக்கு கொண்டு வருவதே எங்கள் வேலை என சசிகலா தெரிவித்துள்ளார்.

ஆங்கில புத்தாண்டையொட்டி, சசிகலா சென்னை போயஸ் கார்டனில் உள்ள தனது இல்லத்தில் தொண்டர்களைச் சந்தித்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தி.மு.க. ஆட்சி வந்ததிலிருந்து தொடர்ந்து குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. திருத்தணி ரயில் நிலையத்தில் சிறுவர்கள், வட மாநில இளைஞரை போதையில் கடுமையாக தாக்கியுள்ளனர். அடுத்த சில தினங்களில் அதே ரயில் நிலையத்தில் புடவை வியாபாரியை சிறுவர்கள் தாக்கியுள்ளனர். திருப்பூரில் ஒரு கோயில் திருவிழாவில் போதையில் ஒரு இளைஞர் கத்தியை காட்டி பொலிஸாரையே மிரட்டியுள்ளார். பொலிஸை கையில் வைத்திருக்கும் முதல்வர் ஸ்டாலினுக்கு நிர்வாகம் செய்ய தெரியவில்லை.

தமிழகத்தில் 1.75 கோடி பேர் தினமும் பஸ்களில் பயணிக்கின்றனர். அவர்கள் பயணிக்க ஏதுவாக 10,900 பஸ்கள் இருக்க வேண்டும். 2011-2016 அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆயிரம் பஸ்கள் வாங்கப்பட்டன. தி.மு.க. ஆட்சியில் எத்தனை பஸ்கள் வாங்கினார்கள் என்ற விவரத்தையே வெளியிடவில்லை. விரைவு பஸ்கள், 3 லட்சம் கி.மீ ஓட வேண்டும். இல்லாவிட்டால் 7 ஆண்டுகளுக்கு இயக்கலாம். மாவட்டத்துக்குள் இயக்கப்படும் பஸ்கள் 6 லட்சம் கி.மீ அல்லது 6 ஆண்டுகள் இயக்கப்பட வேண்டும். அதன் பிறகு, புதிய பஸ்களைத்தான் இயக்க வேண்டும். இந்த விதிகளை ஜெயலலிதா சிறப்பாக கடைபிடித்து வந்தார்.

ஆனால் தி.மு.க. அரசு, விரைவுப் பஸ்களை 9 லட்சம் கி.மீ அல்லது 12 ஆண்டுகள் இயக்கும் வகையில் விதிகளை திருத்தியது. ஆள் பற்றாக்குறை காரணமாக போதிய ஓட்டுநர்களையும் நியமிக்கவில்லை. இருக்கும் ஓட்டுநர்களை ஓய்வின்றி பணியாற்ற அறிவுறுத்துகின்றனர். இதனால் விபத்துகள் ஏற்படுகிறது. கடலூரில் கூட அண்மையில் அரசுப் பஸ் ரயர் வெடித்து, வீதியில் சென்ற கார்கள் மீது போதி, 9 பேர் உயிரிழந்தனர். அரசு பஸ்களில் ஏராளமான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. அந்த வருவாயில் கூட புதிய பஸ்களை வாங்கவில்லை. அந்த அளவுக்கு மோசமான நிர்வாகம் நடக்கிறது. அதிக அளவில் கடன் வாங்கி, மாதம் 6 ஆயிரம் கோடி இந்திய ரூபா வட்டி கட்டுகின்றனர்.

இப்போது தமிழகத்தில் தூய்மைப் பணியாளர்கள், தாதியர்கள், அரசு ஊழியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என போராட்டம் நடத்தி வருகின்றனர். தி.மு.க. அரசில் எங்கு பார்த்தாலும் போராட்டமாக உள்ளது. இந்த நிலை மாற ஜெயலலிதா ஆட்சி மீண்டும் வர வேண்டும். தேர்தல் நெருக்கத்தில், அ.தி.மு.க-வில் நிலவும் எல்லா பிரச்சினைகளும் தீரும் என நம்புகிறேன்.

தமிழக எம்.பி-க்கள் தமிழக நலனுக்காக பேசுவதே இல்லை. அரசியல் மட்டுமே பேசுகின்றனர். மத்திய அரசுடன் சுமுகமான போக்கை கடைபிடித்து நிதியை பெற்று, தமிழகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்லாமல், மோதல் போக்கை கடைபிடிக்கின்றனர். இதனால் வரவேண்டிய நிதியும் வருவதில்லை.

எனவே, இந்த தேர்தலில் மக்கள் தெளிவாக சரியான பாடத்தை தி.மு.கவுக்கு கற்பித்தால் தான் தமிழகத்தில் வளர்ச்சியை பார்க்க முடியும். அது மக்கள் கையில் தான் உள்ளது. போராட்டங்கள், சட்டம் – ஒழுங்கு பிரச்சினைகள் நிறைந்த தி.மு.க. அரசை முடிவுக்கு கொண்டு வருவதே எங்கள் வேலை.” என்று தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத்தை ஆதரிக்கின்ற நாடுகளிடமிருந்து தன்னைப் பாதுகாக்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டு

## எஸ்.ஜெய்சங்கர் தெரிவிப்பு



பயங்கரவாதத்தை ஆதரிக்கும் மோசமான அண்டை நாடுகளிடம் இருந்து தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள இந்தியாவுக்கு முழு உரிமையும் என்றது என்று வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே இதனைக் கூறிய அவர், பாகிஸ்தானையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.


இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாக்கும் உரிமையைப் பயன்படுத்தும் என்றும், பயங்கரவாதத்திற்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பது குறித்த வெளிப்புற பரிந்துரைகளை ஏற்காது எனவும் அவர் கூறினார்.

அத்துடன், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் எதிர்வினையை புதுடில்லி மட்டுமே தீர்மானிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார்.



# சிதம்பரம் நடராஜர் கோயில் தேரோட்டம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

சிதம்பரம் நடராஜர் கோயில் தோரட்டம் இன்று நடைபெற்றது. இதில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சிவ சிவா என்ற முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர்.



# அமெரிக்கர்களைத் திருமணம் செய்தாலும் 'கிரீன் கார்ட்' பெற்றுக்கொள்ள முடியாது

## ட்ரம்ப் நிர்வாகம் புதிய கட்டுப்பாடு




அமெரிக்கர்களை திருமணம் செய்தாலும், 'கிரீன்' அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று ட்ரம்ப் நிர்வாகம் புதிய கட்டுப்பாட்டை அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு பல்வேறு நாடுகளில் இருந்து பலர் கல்வி மற்றும் தொழில் ஆகியவற்றுக்காக பல்வேறு விசாக்களில் செல்கின்றனர்.

அவர்களில் பெருமளவானோர் அமெரிக்க குடியுரிமை பெறுவதற்காக கிரீன் அட்டைகளுக்கு விண்ணப்பிக்கின்றனர் என கூறப்படுகிறது.

இந்த கிரீன் அட்டை ஒரு வெளிநாட்டவர், அமெரிக்காவில் நிரந்தரமாக வாழவும், தொழில் செய்யவும் சட்டப்பூர்வ உரிமையை வழங்குகிறது.

அதில் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற பெண் அல்லது ஆண் ஒருவரை திருமணம் செய்து கொள்பவர்கள், எளிதாக கிரீன் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தற்போது முறைகேடான முறையில், கிரீன் அட்டையைப் பெற்றுக் கொள்ள பலர் திருமணம் செய்து கொள்வதாக பல முறைப்பாடுகள் எழுந்தன.

இந்தநிலையில் குடியேற்றம் தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வரும் ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் தற்போது கிரீன் அட்டைகளுக்கு புதிய கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

அதன்படி அமெரிக்கக் குடிமகனைத் திருமணம் செய்து கொள்வது மாத்திரமே கிரீன் அட்டைக்கான உத்தரவாதம் அல்ல என்று அமெரிக்க குடிவரவு துறை அறிவித்துள்ளது.

அதற்கமைய, கணவன், மனைவி இருவரும் ஒரே வீட்டில் வசிக்கவில்லை என்றால், அவர்களின் கிரீன் அட்டை விண்ணப்பத்துக்கு சிக்கல் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

# புத்தாண்டின்போது தீயினால் அழிவடைந்த பழமை வாய்ந்த வொண்டெல் தேவாலயம்





நெதர்லாந்து, ஆம்ஸ்டர்டாமின் புகழ்பெற்ற பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ள 154 ஆண்டுகள் பழமையான வொண்டெல் தேவாலயம், புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் பெருமளவில் அழிவடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க வொண்டெல் தேவாலயத்தில், புத்தாண்டு நள்ளிரவு கொண்டாட்டங்கள் உச்சத்தில் இருந்தபோது பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீயினால் தேவாலயத்தின் சுமார் 50 மீற்றர் (164 அடி) உயரமான கோபுரம் மற்றும் அதன் கூரைப் பகுதி இடிந்து விழுந்துள்ளதோடு, கட்டடத்தை இனிமேல் சீரமைக்க முடியாது என அவசர கால சேவைகள் தெரிவித்துள்ளன.

1872 இல் பிரபல கட்டிடக் கலைஞர் பியர் குய்ப்பர்ஸ் என்பவரால் வடிவமைக்கப்பட்ட இந்த நியோ-கோதிக் பாணி கட்டிடம், ஆம்ஸ்டர்டாமின் ஒரு முக்கியமான நினைவுச் சின்னமாகும்.

நள்ளிரவு 12 மணிக்குப் பிறகு வான வேடிக்கைகள் வெடிக்கத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே இந்தத் தீ பரவியதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலத்த காற்று வீசியதால் தீயைக் கட்டுப்படுத்துவதில் கடும் சவால்கள் ஏற்பட்டதோடு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அருகில் இருந்த குடியிருப்புகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

டச்சு கடற்படையினர் 60 மீற்றர் உயரமான வான்வழி தளங்களைப் பயன்படுத்தி தீயை அணைக்கப் போராடிய நிலையில், வியாழக்கிழமை காலை தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும், தீ விபத்துக்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், சட்டவிரோதமான வாணவேடிக்கை பொருட்கள் இந்த விபத்திற்குக் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.


பக்கங்கள் - 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 02/01/2026

## 16 வயது சிறுமி சடலமாக மீட்பு

C3







# மது அருந்திவிட்டு பணிக்குச் சென்ற ஏர் இந்தியா நிறுவனத்தின் விமானி

### கனேடிய அதிகாரிகள் குற்றச்சாட்டு

வான்கூவர் சர்வதேச விமான நிலையத்தில் ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் விமானி ஒருவர் மது அருந்திவிட்டு பணிக்கு வந்தார் என கனேடிய அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த சம்பவம் விரிவான விசாரணை, அமுலாக்க நடவடிக்கை மற்றும் விமான விதிமுறைகளுக்கு இணங்குவது குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் கனடா போக்குவரத்து நிறுவனத்தின் வெளியுறவு செயல்பாட்டுத் துறை ஏர் இந்தியாவுக்கு அனுப்பிய முறையான தகவலின் படி,

2025 டிசம்பர் 23 அன்று, இரண்டு முறை மூச்சுப் பரிசோதனை செய்ததில் அவரது அமைப்பில் ஆல்கஹால் இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, விமானி பணிக்கு தகுதியற்றவர் என்று கண்டறியப்பட்டது.

C2



# கொவிட் காலத்தில் மோசடியாகப் பெற்றுக்கொண்ட 10.35 பில்லியன் டொலர்களை மீட்க நடவடிக்கை

கனடாவில் கொவிட்-19 காலத்தில் வழங்கப்பட்ட நிவாரண உதவித் தொகைகளில், கனடா வருமான திணைக்களம் தற்போது 10.35 பில்லியன் கனடிய டொலர் தொகையை மீட்டெடுக்க வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளது.

2025 நவம்பர் 30 நிலவரப்படி, கனடியர்களுக்கு மொத்தமாக 83.5 பில்லியன் டொலர் மதிப்பிலான கொவிட் நிவாரணத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளதாக கனடிய வருமான திணைக்களம் பேச்சாளர் நினா யூசுப்போவா தெரிவித்துள்ளார்.

இதில், கனடா அவசரகால வருமான நிவாரணத் திட்டம் மூலம் மட்டும் 45.3 பில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொவிட் நிவாரணத் தொகைகளுடன் தொடர்புடைய நிலுவைத் தொகைகளை மீட்டெடுக்கும் நடவடிக்கையாக, 2023 ஆம் ஆண்டு முதல் தகுதி இல்லாமல் நிவாரணம் பெற்றவர்கள் அல்லது அதிகமாக பணம் பெற்றவர்களுக்கு திருப்பிச் செலுத்துமாறு அறிவிப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும் யூசுப்போவா தெரிவித்தார்.

இந்த நிலுவைத் தொகைகள், அதிகமாக வழங்கப்பட்ட பணம் அல்லது தகுதி இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகைகள்

C2




# ஒட்டாவாவில் இளைஞரின் உடல் பாகங்கள் மீட்பு

ஒன்டாரியோ மாகாணத்தில் ஒட்டாவா நகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் உடல் பாகங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து நார்த் பே ஒன்டாரியோ மாகாண பொலிஸின் குற்றப் பிரிவு தீவிர விசாரணையை ஆரம்பித்துள்ளது.

26 வயதான ஹகீம் முஹிகிரா என்பவரின் உடல் பாகங்கள், கடந்த 28 ஆம் திகதி காலை 8 மணியளவில், ஹெட் கிளாரா மற்றும் மாரியா நகர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த பகுதி நார்த் பே மற்றும் ஒட்டாவா நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளதுடன், மத்தாவா நகரத்திற்கு அடுத்ததாக உள்ளது.

இந்த சம்பவத்தில் கொலை அல்லது சந்தேக மரணம் உள்ளதா, அவர் எப்போது உயிரிழந்தார், உடல் பாகங்கள் துல்லியமாக எந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன என்பதுபோன்ற முக்கிய தகவல்களை பொலிஸ் இதுவரை வெளியிடவில்லை.

# கனடாவில் 80 மில்லியன் டொலர் பணப் பரிசு வென்ற அதிர்ஷ்டசாலி

கனடாவில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற லாட்டோ மேக்ஸ் சீட்டிழுப்பில் 80 மில்லியன் டொலர் ஜாக்பாட் பரிசு வென்றெடுக்கப்பட்டுள்ளது.

அந்த டிக்கெட் ஒன்டாரியோவின் லண்டன் நகரில் விற்கப்பட்டுள்ளது.

2024 மார்ச் மாதம் லாட்டோ மேக்ஸ் ஜாக்பாட் 80 மில்லியன் டாலராக உயர்த்தப்பட்ட பிறகு, ஒன்டாரியோவில் இந்த ஜாக்பாட் முதல்முறையாக வென்றுள்ளது.




மேலும், ஒரே ஒரு டிக்கெட் மட்டுமே ஜாக்பாட்டை வென்ற இரண்டாவது முறையும் இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜாக்பாட் வெற்றியாளர் பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

வெற்றியாளர்கள் லொத்தர் சீட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தங்களது பரிசினை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**கொவிட் காலத்தில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக உருவானவை என்றும் அவர் விளக்கினார்.

2025 நவம்பர் 30 வரை, சுமார் 14 லட்சம் பேர் தனிநபர் கொவிட் நிவாரணத் தொகைகளுடன் தொடர்புடைய கடன்களில் இருந்து சுமார் 3.3 பில்லியன் டொலரை திருப்பிச் செலுத்தியுள்ளதாக கனடிய வருமான திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், நிலுவைத் தொகைகளை செலுத்தாமல் தவிர்ப்பவர்களுக்கு எதிராக கனடிய வருமான முகவர் நிறுவனம் “உறுதியான மற்றும் பொறுப்பான” நடவடிக்கைகள் எடுப்பதாகவும், தேவையெனில் சட்ட நடவடிக்கைகளின் மூலம் கடனை மீட்டெடுக்கவும் தயாராக இருப்பதாகவும் நினா யூசுப்போவா எச்சரித்துள்ளார்.

**மது அருந்திவிட்டு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நேரத்தில் வான்கூவரில் இருந்து வியன்னாவுக்கு ஏர் இந்தியா விமானமான யுஐ186 ஐ விமானி இயக்க திட்டமிடப்பட்டிருந்தார்.

எனினும், விமானியின் உடல் தகுதி குறித்து கவலைகள் எழுந்ததை அடுத்து, ரோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸார் இந்த விடயத்தில் தலையிட்டனர் என அந்தக் கடிதம் கூறுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பல ஒழுங்குமுறை மீறல்களை கனேடிய அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர்.

இந்த விடயம், விமான நிறுவனமும் விமானக் குழு உறுப்பினரும் கனேடிய விமானப் போக்குவரத்து விதிமுறைகள் 602.02 ஐயும், விமானக் குழு உறுப்பினரும் விதிமுறை 602.03 ஐயும் மீறியதை சுட்டிக்காட்டுகிறது.

இது, போக்குவரத்து கனடா சிவில் விமானப் போக்குவரத்து வழங்கிய ஏர் இந்தியாவின் வெளிநாட்டு விமான இயக்குனர் சான்றிதழின் கீழ் நிபந்தனை மீறலையும் மேற்கோளிட்டுள்ளது.

அதேநேரம் போக்குவரத்து கனடா நிறுவனம், ஏர் இந்தியா நிறுவனத்திடம் விரிவான உள் விசாரணை நடத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதிக்குள் விமான நிறுவனத்திடமிருந்து பதில் கோரப்பட்டுள்ளது.



# 16 வயது சிறுமி சடலமாக மீட்பு

கனடாவின் வான்கூவரில் கடந்த திங்கள் கிழமை இரவு காணாமல் போனதாக புகார் அளிக்கப்பட்ட 16 வயது சிறுமி, செவ்வாய்கிழமை காலை ஒரு வீட்டில் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு பெண்டர் மற்றும் ரென்ஃப்ரூ தெருக்களுக்கு அருகிலுள்ள ஒரு வீட்டிற்கு காலை 9 மணியளவில் பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

"அந்த சிறுமி திங்கள்கிழமை இரவு காணாமல் போனார் என முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவரது காணாமல் போதல் தொடர்பாக நார்த் வான்கூவர் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்." என பொலிஸ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிறுமியின் மரணத்திற்கான காரணம் இதுவரையில் வெளியிடப்படவில்லை. சிறுமி எவ்வாறு இறந்தார், குற்றச்செயல் ஏதேனும் தொடர்புடையதா என்பதை கண்டறியும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஏதேனும் தகவல் தெரிந்தவர்கள் 604-717-2500 என்ற எண்ணில் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

